தேதி.06.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

MCOP. No.67/2021 திருமதி.பத்மா, க/பெ.ஜெயசந்திரன் ம.சா.1

<u>ம.சா.1: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

விபத்து சமயத்தில் எனது மகன் எங்கிருந்து எங்கு சென்றுகொண்டிருந்தார் என்றால் சத்தியமங்கலத்திலிருந்து கெஞ்சனூர் சென்று கொண்டிருந்தார். எதிரே வந்த லாரி சரியான வேகத்தில் தான் வந்தது என்றால் சரியல்ல. எனது மகனின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது அதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீடு மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்றும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள் நான் கேட்டுள்ள இழப்பீடு தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.